**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 239/2019**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய சிதம்பர சுதந்திரநாதன் **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 20.03.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சிதம்பர சுதந்திரநாதன் | | |
| Father /Husband Name | : | பக்கிரசாமி | Court | : |
| Village | : | பொறையார் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 70/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

26.04.2018 தேதியிட்ட தாவா சொத்திற்காக மீனாட்சி என்பவரின் பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் **வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.08.2018 தேதியிட்ட வாதிகள் பெயரில் தரங்கம்பாடி மண்டல துணை வட்டாட்சியர் வழங்கிய மனை வாரி தோராய பட்டாவின் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.01.1987 முதல் 31.12.2000 வரை தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழின் அசல் **வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.01.2001 முதல் 06.08.2018 வரை தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழின் அசல் **வா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.